


# காஞ்சி

வார இத

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 பங்குனி 4 (17-3-74) | இதழ்: 33, 34, 35


★

## வாட்டுதடி தோழி!

(கவிஞர். மணிவேந்தன்)

—★—

எடுப்பு

நினைவென்னை வாட்டுதடி தோழி— அவர்
நினைவென்னை வருத்துதடி தோழி!

தொடுப்பு

விரும்பும் உளமுடனே கரும்பு மொழியுடனே
அரும்பு மீசையுடன் குறும்புசெயும் காதலரின்
[நினைவென்னை...]

முடிப்பு

கண்ணே வாவெனக் கண்ணும் கெஞ்சிடும்
கன்னம் சிவந்திடக் கைவிரல் மிஞ்சிடும்
அண்ணாந்து நின்றிட அவர்இதழ் கொஞ்சிடும்
அள்ளியே அணைக்கையில் என்மனம் அஞ்சிடும்
[நினைவென்னை...]

அகப்பாடம் புரட்டி மகிழ்வூட்டும் என்னவர்
சுகப்பாடம் புகட்டிச் சுவையூட்டும் கண்ணவர்
நகக்கோலம் தீட்டி நகைப்பூட்டும் மன்னவர்
பகற்காலம் வரும்மட்டும் பரிந்தூட்டும் அன்னவர்
[நினைவென்னை...]

### உள்ளே......


ஒன்றாகக் கூடி,
இன்பத் திராவிடம் தேடி!
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

மாநில தன்னாட்சி பிறப்புரிமை

★

பாம்பு கடிக்கும்
தேள் கொட்டும்
(கட்டுரை)

★

மரணத்தின் வாசல்
(சிறுகதை)


★

விலை: 0-25 காசு

# "மாநில தன்னாட்சி பிறப்புரிமை"

— கந்ததாசன்

'மாநிலத்திற்கு தன்னாட்சி வேண்டும்' என்று கூறினால் யார் யாருக்கெல்லாமோ அடிவயிற்றைக் கலக்குகின்றது. மாநில தன்னாட்சி கேட்பது பிரிவினை வாதமல்ல என்று பலமுறை தி. மு. கழகத்தவர்கள் திட்டவட்டமாக காரண—காரியங்களோடு உறுதியாகக் கூறிய பின்னும் — கழகத்தை எதிர்க்க வேண்டும் என்ற ஒரே காரணத்தினால் 'அது பிரிவினை வாதமே' என்று பேசி வருகின்றனர்.

அதிக அதிகாரங்கள் கேட்பதற்குத்தான் — மாநில தன்னாட்சி என்று கூறுகிறோம் என்று கழகத்தவர்கள் தெளிவுபடுத்திய பின்பு—அதற்கு 'மாநில தன்னாட்சி' என்ற சொல்லையே உபயோகிக்கக் கூடாது என்று சமாதானம் கூறுகின்றனர்.

'பசு' ஒன்று இருக்கின்றது என்றால், அதைப் 'பசு' என்றுதானே கூறுவார்கள். அதை விட்டு விட்டு 'நாலுகால் பிராணி' என்று கூறினால் போதாதா? என்று எவனேனும் கேட்டால் அவனைப் பார்த்து என்ன எண்ணத் தோன்றும்?

'நாலு கால்கள் பசுவுக்கு மட்டும்தான் உள்ளது' என்று அவன் கருதுகின்றான் என்று கூறுவோமா? அல்லது 'பசு' என்ற பெயரைக் கண்டு பயப்படுகின்றான் என்று முடிவு கட்டுவோமா? இல்லையென்றால் அவன் மூளையில் என்ன கோளாறோ? என்று எண்ணுவோமா?

அந்த நிலையில்தான் இருக்கின்றது 'மாநில தன்னாட்சி' என்ற சொல்லைக் கேட்டதும் நடுங்குவோர் நிலை.

அண்ணல் காந்தி அடிகள் 'கிராம அரசு' ஏற்பட வேண்டும் என்று பாடுபட்டார் என்று மேடை தோறும் முழங்குவோர் அந்த 'கிராம அரசின்' தத்துவத்தைக் கொஞ்சம் விளக்கட்டுமே? அப்படி விளக்கினால் கிராமங்கள் தன்னிறைவு பெற்றதாக—எல்லா வசதியும் நிறைந்ததாக இருக்கவேண்டும் என்றுதானே கூறுவார்கள்—அது கிராம தன்னாட்சி தானே? அந்தக் கிராம தன்னாட்சியின் அடிப்படையில்தானே மாநிலத்திற்கு கழக அரசு தன்னாட்சி கேட்கின்றது. கிராமத்திற்கு தன்னாட்சி வேண்டும் என்று கேட்டவர்கள் — இன்று மாநிலத்திற்கு தன்னாட்சி என்று சொன்னதும் அஞ்சுவானேன்?—நடுங்குவானேன்?

மாநில தன்னாட்சி இல்லாத காரணத்தினால்—இன்று இந்தியாவில் எல்லா மாநிலங்களும் பொதுவாக பின்தங்கிக் கிடக்கின்றன.

எந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றாலும் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் செய்யவேண்டியிருக்கின்றது. அதனால் காலதாமதமும்—சமுதாய முன்னேற்றமும் பாதிக்கப்படுகின்றன. அதனாலேயே முக்கியமான (1) நாட்டுப் பாதுகாப்பு (2) வெளிநாட்டுத் தொடர்பு (3) நாட்டுச் செலாவணி (4) அஞ்சல் துறை, போன்ற அவசியமான—முக்கியத் துறைகளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு (1) திட்டமிடுதல் (2) உற்பத்தியைப் பெருக்குதல் (3) பொருளாதார வளர்ச்சி இவைகளை மாநில அரசிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

ஒவ்வொரு திட்டத்திற்கும் மத்திய அரசை நாடிக்கொண்டிருக்கும் இன்றைய பிற்போக்கான கொள்கைகள் நாட்டை மிகவும் கீழ்நிலைக்குக் கொண்டு போய்விடும்.

அமெரிக்காவிலும்—உருசியப் பெருநாட்டிலும் கூட்டாட்சித் தத்துவத்தைச் செயல்படுத்துவதாலேயே அந்த நாடுகள் ஏற்றமும் செல்வத்தில் உலகத்தில் முதலிடத்தையும் பெற முடிந்தது.

கூட்டாட்சித் தத்துவம் நாட்டைக் காக்கும்
தன்னாட்சித் தத்துவம் மக்களைக் காக்கும்

மாநில தன்னாட்சி கிடைக்குமேயானால்—ஒரு மாநிலம் இன்னொரு மாநிலத்தைக் கண்டு ஏங்க வேண்டியதாயிருக்காது. மாநிலங்களுக்குள்ள வேற்றுமைகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். அதன் மூலம் பாரதம் இன்னும் பலப்படும்.

எப்படி மொழிவழி மாநிலங்களால் — மாநில மக்கள் உள்ளம் மகிழ்ந்ததோ—அதைப் போலவே—தன்னாட்சி மாநிலங்களால் இரட்டிப்பு மகிழ்ச்சி மக்கள் சமூகத்தில் ஏற்படும்.

மாநில தன்னாட்சி இல்லாத காரணத்தால் இன்று நாட்டின் முக்கிய திருநாளான விடுதலை நாளிலும்—குடியரசு நாளிலும் மாநில முதல்வர்கள் 'விடுதலைக் கொடியைக்கூட ஏற்ற அருகதை அற்றவர்கள்' என்ற நிலை இருக்கின்றது. மத்திய அரசால் நியமிக்கப்பெற்ற ஆளுநரே அந்த விழாக்களில் கொடி ஏற்றி வைக்கின்றனர். இந்த கொடி ஏற்றுதலில்கூட அதிகாரம் இல்லாத முதல்வர்களால் வேறு எதைத்தான் செய்ய இயலும்.

'வானொலி' மூலம் அந்தந்த மாநிலத்து வளர்ச்சிக்கு வேண்டிய திட்டங்களை மக்களுக்குச் சொல்லக்கூட-மத்திய அரசை நாடவேண்டியதாயிருக்கின்றது. மாநிலத்து செய்திகள்கூட மத்திய அரசின் தணிக்கையில்தான் வரவேண்டியதாய் இருக்கின்றது. இப்படிப்பட்ட ஓர் மாநில அமைப்பு இருப்பதும் ஒன்றுதான் — இல்லாதிருப்பதும் ஒன்றுதான். 'வானொலி' வசதி மாநிலங்களுக்கு உரிமையாக்கித் தரப்படுமேயானால் மாநில அரசு மக்கள் குறைகளுக்கு—உடனுக்குடன் விளக்கம் தந்திட உதவும். இதனால் பொருளறியாக் குழப்பங்கள் குறையும்.

பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்திட்ட திட்டங்களில் தலையாயது 'மாநில தன்னாட்சி' மாநில தன்னாட்சியினாலேயே தமிழகம் தலைநிமிர்ந்து ஒளி பெறும். அதனைப் பெற்றிட அனைத்து தமிழர்களும் ஒன்று திரண்டிட வேண்டும். அண்டை மாநில சகோதரர்களும் ஊக்கம் கொடுத்திட வேண்டும்.

'விடுதலை எனது பிறப்புரிமை' என்றார் திலகர். 'மாநில தன்னாட்சி' ஒவ்வொரு மாநிலத்தவர்களின் பிறப்புரிமை. நாட்டுக்கு விடுதலை கிடைத்ததுபோல —மாநிலத்திற்கு தன்னாட்சியும் ஒருநாள் கிடைத்தே தீரும்.

# பாம்பு கடிக்கும்! தேள் கொட்டும்!!

— ந. மதிமுகன்

பாம்பு கடிக்கும், தேள் கொட்டும்—ஆமாம்–கடிக்கத்தான் செய்யும், கொட்டத்தான் செய்யும்...தத்துவ வித்தகச் சண்டப் பிரசண்டமா? விரல் சுவைக்கும் சிறுபிள்ளைகள் கூட வேகமாய்க்கூறும் உண்மையைக் கூறவந்து விட்டாயே யாரப்பா நீ! குற்றாலத்தின் பக்கம் குடியிருப்பவனா—அல்லது கீழ்ப்பாக்கமா?.... சாடிவிடாதீர்கள் இவ்வாறெல்லாம்.

மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகத்தில் தலையிடுவார்கள்!?

பாம்பு கடிக்கத்தான் செய்யும்!

தேள் கொட்டத்தான் செய்யும்!!

யாரின் கூற்றாக இருக்கும்....தலையைப் பிய்த்துக் கொள்ளவேண்டாம்...இதோ...பராக்.... பராக் ...விருதை வீரராக இருந்து (ஒரு காலத்தில்)... நாகர்கோவில் நாடுபவராகி (தேர்தல் காலம்) ....காமராஜ் ஆகிக் (வேறு வழியில்லை) காட்சி அளிக்கும் படியாத மேதையின் பளபளக்கும் வாய் வீச்சுக்கள்தான் மேலே கூறியவை.

காமராஜராவது மக்கள் பிரதிநிதிகளைப் பற்றி இப்படிக் கூறுவதாவது...என்னடா! புதுக் கரடி விடுகிறாய் என்பீர்கள்...இல்லை இல்லை....உண்மை...உண்மை முழு நிர்வாண உண்மை. திரு. K. V. R. ஐயங்கார் என்பவர் அய்தராபாத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் இவ்வுண்மையை வெளியிட்டிருக்கிறார்.

மக்கள் பிரதிநிதிகள் பாம்பாகத் 'தேளாக காட்சி தந்தால் நம்மைப்போன்ற சாமான்யர் பூச்சி புழுக்களாக வன்றோ தெரிவோம்.

மக்களை அவர் என்றைக்குமே மதித்ததில்லை, எதற்கும் அஞ்சாதவர் என்பதைக் கடந்தகால வரலாறு பளிச்செனக் காட்டுகிறது.

யாருக்குமே வராத ஒரு தனித்திறமையுண்டு கனம் காமராசர் அவர்களுக்கு. தனக்குப் பிடிக்காதவர்கள், தன்னைவிடச் செல்வாக்குப் பெற்றவர்கள், யாரேனும் கட்சியில் வளர்வது தெரிந்தால்....அவர்கள் விரலில் வளரும் நகம்தான்...எடுத்துகாட்டாக ஆந்திரகேசரி பிரகாசம் காரு, எல். எஸ். கரையாளர்...இவ்வாறு பட்டியல் தொடரும். இறுதியாக இந்திரா அம்மையார் பக்கம் பார்வை சென்றது—. ....அம்மையாரோ அணுகுமுறை தெரிந்தவர் புரிந்தவரல்லவா?...மேதையவர்கள் தழுவியது தோல்வியைத்தான்!?

1952ல் முதல் பொதுத்தேர்தல்...காங்கிரசிற்குப் பெரும்பான்மையில்லை...ஆசை வெட்கமறியாது!? காமராசரால் வெறுத்து ஒதுக்கப்பட்டு (டைவர்ஸ்) விரக்திச் சூடு தணிய குற்றாலச் சாரலை நாடிய மூதறிஞரிடம் சரணடைந்து ...இழுத்து வந்தார். அமைச்சர் நாற்காலியில் அமர்த்தவும்பட்டார்!?...கட்சிக்குப் பெரும்பான்மையில்லையே...எப்படி முடிந்தது? அதன் பெயர் சமதர்மச் சன நாயகம்! அந்தச் சன நாயகம் வெற்றிபெறவில்லையானால் நாம் ஒரு காலா காந்தியை இழந்திருக்க வேண்டிவருமே! மக்கள் பெரும்பான்மை யளிக்கவில்லையென்றால் பதவியிலிருக்கக் கூடாதென்று சொல்பவரார்?!

அமைச்சர் பதவியைப் பணயமாக வைத்து ....இரு கட்சியை இணைத்து....பெரும்பான்மையை உருவாக்கினார்....ஆனால் சன நாயகம் அருமைக் காமராசரால் அரும்பில் கிள்ளி எறியப்பட்டது.

இத்துடன் முடிந்து விட்டதா வீரப் பிரதாபம்...குற்றாலத்திலிருந்து இழுத்து வந்து கொலுவேற்றிய ஆச்சாரியார் குப்புறத் தள்ளப்பட்டார். நமது மாபெருந்தலைவர் கொலு வீற்றிருந்தார்.

இந்த மாபெரும் சன நாயக....வாதியை நாடும் ஏடும் போற்றுகிறது...அவரோ? கண்களில் உத்தரக்கட்டையை வைத்துக்கொண்டு துரும்பினைச் சாடுகிறார்.


தேவிகுளம், பீர்மேடு பறிபோனபோது தமிழர்கள் எல்லாம் முழங்கிய வேளைகளில், "குளமாவது மேடாவது" என்று எள்ளியவர் தான் இந்தக் காமராசர். இந்தி எதிர்ப்பின் போது....இளம் உள்ளங்களை இரத்தச் சேற்றில் அழுத்திக் கொக்கரித்த பக்தவத்சலங்களை விட்டுவிட்டு சேர நாட்டின் இயற்கை வளம் சுவைத்தவர்தான் கர்மவீரர்.

இன்று மேடை ஏறி நின்று சன நாயக வாடை தோன்றப் பிளிறுகிறார்....ஏடுகளெல்லாம் கூடி நின்று தோடி வாசிக்கின்றன. மக்கள் மறந்து விடமாட்டார்கள்..."மக்களாட்சி முறை என்பது உருவத்தில் மட்டுமல்ல பண்பிலும் இருக்கவேண்டும்" என்று முழங்கிய வித்தகன் அண்ணா ஆற்றிய பணி வீண் போவதில்லை....

பாம்பு, தேள்—கடிக்கும், கொட்டும்.

மான் மயில்—வேறுபாடு உணரத் தெரியாதவர்கள் அல்லர் தமிழர். ★

# தம்பிக்கு மடல்



## தம்பி!

காஞ்சீபுரம்
2—10—60

புரிகிறது, புரிகிறது, உன் குறும்புப் புன்னகை. எப்படி அண்ணா! எமது திறமை!! தம்பிகள் இருக்கிறார்கள் எதையும் தாங்கிட! அறிவாற்றலிருக்கிறது அவர்களிடம் நிரம்ப; எதனையும் வெற்றியுடன் செய்துமுடிக்க! எனக்கென்ன குறை! எதையும் அவர்களைக்கொண்டே செய்துமுடிப்பேன். என்றெல்லாம் கூறி, நிம்மதியாக, ஓய்வாக, இருந்துவிடலாம் என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தாய், பார்த்தனையா, இப்போது, பிடித்திழுத்து வந்து இருக்கையிலே அமர்த்திவிட்டோம், பொதுச்செயலாளராக்கி விட்டோம்! என்று கேட்கிறாய், குறுநகை மின்னிட, வசமாகச் சிக்கிக்கொண்டுவிட்டேனே நான். அன்புக் கயிற்றினாலே பிணைத்துவிட்டாய்; நீ ஆட்டிவைக்கிறபடி ஆடித் தீரவேண்டிய வனாகி விட்டேன், வேறென்ன முடிகிறது என்னால்... ஆண்டுபல உழைத்தோம், கள்ளமின்றி, உள்ள திறமைத்தனையையும் ஒப்படைத்துவிட்டு; நிலைமையிலே மகிழத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இனித், தம்பிகளிலே எவரேனும் ஒருவர், மற்றவர்களின் மகிழ்ச்சி கலந்த ஒத்துழைப்பைப் பெற்றுத், தானையினை நடாத்திச் செல்லவேண்டும் என்றுதான், சொன்னேன், 'தவம் கிடந்தேன்' என்றே கூறலாம். ஆனால்......

மீண்டும் 'சுமைதாங்கி'யாக்கப்பட்டுவிட்டேன்!!

விடுவதாக இல்லையே, நீயும் உன்போன்றாரும்.

குன்றெடுக்கும் நெடுந்தோள் எனக்கு இல்லை, எனினும், என் தோளின்மீது பொறுப்புகளை எடுத்து வைத்துச், சுமந்திடச் சொல்வதிலேயோ, உனக்கோர் தனிச் சுவை ஏற்பட்டுவிடுகிறது; நான் என்ன செய்வேன்? தாங்கிக்கொள்கிறேன்.

என்னைப் பிடித்திழுத்து இருக்கையிலே அமர்த்துகிறார்களே, ஏனோ நமக்கு இனியும் இந்த இக்கட்டு என்றெண்ணித் தம்பி! நான் இடர்ப்பட்ட நேரத்தில், ஏனண்ணா! வீண் கலக்கம், எழுந்து நில், எம்முடனே!! என்று கூறுவதுபோலத், தம்பிகள் நாவலரும் கருணாநிதியும், மதியும், நடராசனும், அன்பழகனும், சிற்றரசும், எனைச் சுற்றி வளையம் அமைத்துக் கொண்டனர்—என்செய்வேன்!—தப்பி ஓடிடவா முடியும்—உம்! என்று இழுத்தேன், உட்கார்! என்றனர், வேறென்ன செய்ய இயலும்—பொறுப்பேற்றுக்கொண்டேன்! அல்ல! அல்ல! பொறுப்பேற்றுக் கொண்டேன் என்று கூறிவிட்டேன்! பொறுப்புகளை நிறைவேற்றிட இயலும் என்பதில் எனக்குத் துளியும் ஐயமில்லை—ஏனெனில்—செயல் வீரர்களாம் என் தம்பிமார்கள், ஒவ்வொருவர் ஒவ்வோர் துறையிலே அரசோச்சி, அருந்திறன் காட்டிப் பெறப்போகும் பலன்களை, நாட்டு மக்களைக் கூட்டிக் காட்டி மகிழத்தானே, நான் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறேன்! அவர்கள் செய்தளிக்கும் அணிபணியினை, அனைவரும் கண்டு மகிழ, கொண்டுவந்து காட்டிட, நான் 'பொதுச்'செயலாளன் ஆக்கப்பட்டிருக்கிறேன். இதை எண்ணும்போது, முதலில் எழுந்த திகைப்புத் தகர்ந்து, தித்திப்புத் தட்டுகிறது.

தம்பி! அலைகடலில் கிடக்கிறது முத்து. மண்ணடி கிடக்கிறது தங்கம்! பிறகோ, கைத்திறன், தொழில் நுட்பம் பெற்றோரின் கரம் வந்தடைகிறது; பிறிதோர் நாள், மனதை மயக்கும் பருவத்தாளின் மார்பினில் புரள்கிறது, மாலையாகி!!

எங்கெங்கு இருந்த பொருள், எவரெவர், எத்தகைய திறம்காட்டிக் கொணர்ந்தனர்—கொண்டுவந்த பின்னர், வண்ணம் வளரத்தக்க வடிவம் பெற்று, ஒன்றுடன் மற்றொன்று பொருத்தமான முறையில் இணைக்கப்பட்டு, பிறகு, இருக்குமிடம் சென்று, எழில் எழிலோடு சேர்ந்துவிடுகிறதல்லவா? அஃதேபோல், பல்வேறு துறைகளிலே, பணிபல புரிந்து, என் தம்பிகள், தேடிக்கொண்டு வந்தளிக்கும், பொன்னும் மணியும், முத்தும் பிறவும், கோர்த்தளித்து, அதனைத் தாயகம் அணிந்து, பெருமிதம் கொண்ட நிலையில் இருந்திடக்கண்டு, மகிழ, நீயும் நானும் இருக்கிறோம். மூழ்கியும் கல்லியும், மூறியடித்தும் பகை முடித்தும், அவர்கள் தேடிக் கொண்டுவந்து! அளிக்கும் 'செல்வத்தை' நாட்டுக்குக் காட்டி, காணீர்! என்னருந் தம்பிகளின் ஆற்றலை! என்று கூறி மகிழ்ந்திட, நான், ஆம்! ஆம்! கடற்கரைக் கூட்டத்திலேயே, அதனைத்தான் நான் கூறினேன். அதற்குத் தடை ஏதும் இல்லை என்றே அவர்தம், முகப்பொலிவும், பொலிவளிக்கும் கண்ணொளியும் காட்டின, மட்டற்ற மகிழ்ச்சி.

திராவிட முன்னேற்றக் கழகம், ஈடுபடும் எந்தக் காரியத்தையும், எடுத்துக்காட்டும் எந்தப் பிரச்சினையையும்,

## ஒன்றாகக் கூடி, இன்பத் திராவிடம் தேடி!

மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும், நாடு இன்று கூர்ந்துபார்த்து, இதற்கென்ன பொருள்? இது எதைக் காட்டுகிறது? இதற்கு என்ன நோக்கம்? இது எதன் விளைவு?—என்றெல்லாம், ஆராய்ந்திடவும், உரையாடிடவும் காண்கிறோம்.

எங்கோ, எதுவோ, நடந்தது—என்ற முறையில் அல்ல, ஏன், இது, இவ்வண்ணம், இதுபோது, நடைபெற்றது? என்று, நமது ஒவ்வொரு நடவடிக்கையையும், ஏற்படும் ஒவ்வொரு நிலைமையையும், அலசிப் பார்த்திட இன்று, எல்லா அரசியல் கட்சிகளுமே முயற்சிக்கின்றன. அலசிப்பார்த்து உண்மையை, அந்தக் கட்சிகள் கண்டறிந்துவிட்டன, என்று கூறுவதற்கு இல்லை! ஆனால், முயற்சியிலே மட்டும், மும்முரமாக ஈடுபடுகின்றன.

இது, நமது கழகம் இன்று பெற்றுள்ள வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சான்று.

தம்பி! நாம், கவனிக்கப்பட்டு வருகிறோம்—நமது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் கவனிக்கப்பட்டு வருகின்றன—என்பதுதான் பொருள். அதிலே தொக்கி நிற்பது, சுவைதரும் மற்றோர் உண்மை. எவரும் அலட்சியப்படுத்த முடியாத நிலையில் இன்று நம் கழகம் இருக்கிறது. அனைவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள்—திகிலுடன் சிலர், திடுக்கிட்டுப் போன நிலையில் சிலர், அருவருப்புடன் சிலர், பொறுமையுடன் வேறு சிலர்-அவரவர், தத்தமது நிலைக்கு ஏற்ற நினைப்புடன்—ஆனால், எவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

அடவியில் சென்று கொண்டிருக்கிறான் ஒருவன்—கதிரவன் களைத்துப்போய், இளைத்துப்போய், மறையும் நேரம்—கால்கடுக்க நடக்கிறான்—சற்றுத் தொலைவில், மரம் அடர்ந்த இடத்தில், சிறு பொறி காண்கிறான்—உற்றுப் பார்க்கிறான்—பொறிபெரிதாதாக் காண்கிறான்-நடையை நிறுத்திக்கொள்கிறான்-தீப்பந்தங்கள் போலத் தெரிகின்றன—அசைவற்று நிற்கிறான்—புலியின் கண்களே, அதுபோலத் தெரிகின்றன, என்று எண்ணுகிறான்—திகிலன்றோ அவன் நெஞ்சில் தீயெனப்புகும்.

மாலை வேளை! ஆற்றோரச் சோலை! அழகு தமிழ்ப் பாடலை இசைத்தபடி, நடக்கிறான், ஒரு இளைஞன்! யார்? என்றா. கேட்கிறாய், என்ன தம்பி! நேரம், இடம், கூறினேனே—இதற்கு மேலுமா விளக்கம் வேண்டும்?—சொல்லிவிடட்டுமா அதனையும்—கெண்டை விழியாளைக் கண்டு அவள் தனக்குச் செண்டு தந்து, பின்னர் இன்பம்மொண்டு உண்டிடச் செல்லும் காதலன், போதுமா!-சரி, அவன் செல்கையில், குக்கூ! குக்கூ! என்ற ஒலி செவியில் வீழ்கிறது, என்ன செய்வான்? முகமலர்ச்சியுடன், தருக்களைக் கூர்ந்து கவனிக்கிறான், எங்கு ஒளிந்துகொண்டு இன்னிசை எழுப்புகிறது, குயில், என்று கண்டறிய, திகிலுணர்ச்சியா, அவனுக்கு—தித்திப்பு உணர்ச்சி!

அஃதேபோல, அவரவர், தத்தமது நிலைமைக்கு ஏற்ப, எதிர்ப்படுவனவற்றைக் கூர்ந்து கவனிப்பர்.

வழியே கிடக்கும் எருக்கஞ்செடியினையும், எலும்புத்துண்டுகளையும், சோளக்கொல்லை பொம்மைகளையும், வயல் வளைவாழ் எலிகளையும், கத்திக்கத்திச் செத்த தவளைகளையும், காலில் உதையுண்டு சிதறிய ஓட்டாஞ்சல்லிகளையுமா, கூர்ந்து கவனிப்பார்கள், உலகம் என்ன அவ்வளவு விவரமறியாதாவர்களின், இருப்பிடமாகவா, உளது! இல்லை, தம்பி! நிச்சயம் இல்லை! எதைக்கூர்ந்து கவனித்தாகவேண்டும் என்பது, மிகநன்றாக உலகுக்குத் தெரிகிறது—அதிலும் அரசியல் உலகு இருக்கிறதே, அதற்கு இந்தத் துறையில் தனியானதோர் திறமை, மிக வேகமாக வளர்ந்து விட்டிருக்கிறது.

அத்தகைய அரசியல் உலகம், நமது கழகத்தின் ஒவ்வொரு அசைவையும், நமது பேச்சின், 'அசை'யைக்கூட, மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிறது; காரணம் தேடுகிறது, பொருளை ஆராய்கிறது, இயன்றால், எவ்வழியில் அதனைப் பயன்படுத்தி, நம்மை வீழ்த்தலாம், என்ற நினைப்புடன்.

நெடுந்தொலைவிலிருந்து வர இருக்கும் எதிரிப் படை கண்ணுக்குத் தெரியு முன்பே, தூசி கிளம்பிடக் கண்டதும், படை வருகிறது, என்பதனைக், கண்டறிய முடிகிறதல்லவா? மண் காற்று அடிக்கிறது—அதனைப்போய் இத்துணைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டுமா, என்று கருதுபவன், அந்தத் துறையிலே ஓர் மதியிலியன்றோ.

அதுபோலத்தான், நமது ஒவ்வொரு நடவடிக்கையும், மாற்றாரின் கண்களிலே, நடவடிக்கை உருவாகு முன்பே, தூசி அளவாக இருக்கும் போதே, தெரிந்துவிடுகிறது.

எனவே, தம்பி! நாமும் நமது நடவடிக்கைகள், திருப்பங்கள், முடிவுகள், முயற்சிகள், முகாம் அமைப்புகள் என்பவைகளை, எதிரிகள் கூர்ந்து கவனித்த வண்ணம் இருக்கிறார்கள், என்பதை அறிந்து, அதற்கேற்ப, நமது செயல் முறைகளை மட்டுமல்ல, பேச்சு, முறைகளைக்கூட, செம்மையானவையாக மட்டுமல்ல, ஆற்றல் மிக்கவையாக மட்டுமல்ல, எவரும் பாராட்டத்தக்கவையாக மட்டுமல்ல, எதிரிகள் கண்டு, இதற்கு இதுவா பொருள்? யாமறியாமற் போனோமே! இதற்கா இந்த நடவடிக்கை, எமக்கு முதலில் விளங்காமற் போய்விட்டதே! இவ்விதமாகவா முடிவு செய்தனர், இது திடீர் நடவடிக்கையாகவன்றோ இருக்கிறது!—என்று எண்ணித் திணறத்தக்க விதமாகக், கூடுமானவரையில் அமைத்தல் வேண்டும்—**ஆனால், இது இயற்கையானதாகவும், பலனளிக்கத்தக்கதாகவும், வளர்ச்சியைக் காட்டுவதாகவும், இருத்தலும் வேண்டும்.**

பரபரப்புணர்ச்சிக்காகப் 'பலனளிக்காத் திட்டங்களை மேற்கொள்வதும் தீது பயக்கும்; அமைதியே ஆனந்தம் என்ற போக்குக்காகச்; சொரணையற்றுக் கிடப்பதும், அழிவுதரும், தேய்வினை உண்டாக்கும்.

கரிப்படைகள் மட்டுமே இருந்தால் போதும், வலிவுமிக்க கோட்டைகளையும் தூள் தூளாக்கலாம் என்றெண்ணிப், பிறவகைகளை அமைக்காதிருப்பவன், வெற்றியா பெறுவான்?

கேடயம் ஏந்தாத வாள் வீரன் உண்டோ?

திறமைகள் பலப்பல—அவைகளை இணைத்திடும் முறையோ மிகப் பெரியது, மிக மிகத் தேவையானது.

இன்றல்ல நேற்றல்ல, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு வள்ளுவப் பெருந்தகை கூறிய இப்பேருண்மையை, நமது நாவலர், விளக்கிக் கூறிடக் கேட்டு இன்புற்று இருப்பாயே,

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

அஃதேபோல, நமது கழகத்துக்குக் கிடைத்துள்ள

ஒப்பற்ற, ஓய்வறியா வீரர் குழாத்திலே, பல்வேறு துறைகளிலே, பார்மெச்சும் தனித்திறமை பெற்றோர் உளர்—அவர் ஒவ்வொருவரிடமும், அவரவரின் தனித் திறமையினைக் காட்டிக், கழகத்துக்கு வலிவு ஈட்டிடச் செய்திடும் நோக்குடன் ஒவ்வோர் துறை ஒப்படைக்கப்படல் வேண்டும்—அவர்களே தேர்ந்தெடுத்தல் எனினும், சாலச் சிறந்ததே—அவரவர் தத்தமது தனித் திறமையினைக் காட்டிடத், தமக்கேற்ற துறையினிலே ஈடுபட்டு, ஈட்டிடும், கூட்டுச் சக்தியினை, பொது வலிவினை, வடித்தெடுத்து, உம்மிடம் தந்திட, நான்-அந்த நோக்கத்துடனேயே, என்னை 'இருக்கைக்கு' இழுத்து வந்துள்ளனர், என்று உளமார நம்புகிறேன்.

தம்பி! கரிப்படை வலிவளிக்குமா, பரிப்படை வெற்றி தேடித் தருமா, என்பதுபற்றிக், காலாட்படை, பேசியபடி காலத்தை ஓட்டினால், களத்திலே வெற்றியா, கிட்டும்!

அதுபோலவே, நமது கழகத்தவரில், சிலரோ பலரோ, திறமைகளிலே, எந்தத் திறமை பெரிது, உயர்வுடையது, எது முன்னணி, எது மூன்றுமணி, என்று ஆராய்வதிலும், உரையாடிக் கிடப்பதிலும், ஆர்வம் செலுத்திக் கொண்டிருந்தால், திறமைகளைக் காட்டிக், கழகத்துக்கு வலிவு ஈட்டிட, மனமும் வராது, திறமும் குறையும், நேரமும் கிடைக்காது.

திறமைகளின், வகை வளர வளர, இந்தப் பிரச்சினையில், சுவைமிகு சிக்கல் நிச்சயம் ஏற்படும்—அதனை எத்துணை பொறுப்புணர்ச்சியுடன், தன்னலமறுப்புணர்ச்சியுடன், தீர்த்துக்கொள்கிறோமோ, அதைப்பொருத்தே, நமது வெற்றி உளது.

சென்ற கிழமை, இரு நாட்கள்; தொடர்ந்து ஒரு ஆங்கிலப் படம் பார்த்தேன்.

ஆமாம், தம்பி! ஏன் திகைக்கிறாய்? கழகத்திலே பெரிய பிளவாமே! குழப்பமாமே! அப்படிப்பட்ட நேரத்திலே, படக்காட்சிக்குச் செல்வதா, கவலையில்லாத மனிதனா நீ!—என்றுதானே, கேட்கிறாய்-தம்பி! இதிலிருந்தே, நீ தெரிந்துகொள்ளவேண்டும், பெரிய பிளவு—குழப்பம்—என்பன மாற்றாரின் மனதிலே மூண்ட அற்ப ஆசைகளின் ஓசைகள்!!

எனவேதான், நான் படம் பார்க்கச் சென்றேன்-அங்கும் பாடம் தேடிப் பெறும் பக்குவம் எனக்கு நீண்டகாலமாகவே உண்டு, ஆதலால்.

மதத் தொடர்புடைய கதை—சாலமனும், ஷீபாநாட்டு அரசியும் என்ற படம்.

சாலமன், எகிப்து நாட்டிலிருந்து கிளம்பிவந்த மிகப் பெரும்படையால், தாக்குண்டு, தன் படை சின்னாபின்னமாகிப் போனதுகண்டு, மனம் வெதும்பிக் கிடக்கிறான்.

இரவு, இருளை ஏவி அவனையும் அவன் படையினரையும் அரவணைத்துக்கொள்ளச் செய்கிறது, துக்கம் துளைக்கிறது, தூக்கம் இல்லை.

காலையில், சாலமன் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறான்—களம் சென்றாகவேண்டும்—காற்றெனக் கடுகிவரும் எதிரிப்படையுடன் போரிட—புயலின் வேகம் எதிரிப் படைக்கு—கிளைகள் முறிந்த மரம் போல், இவன் படை.

எதிர்ப்புறம், ஓர் ஒளிப்பிழம்பு, ஊடுருவிக் கிளம்பிடக் காண்கிறான்.

இருளைக் கிழித்துக்கொண்டு, ஞாயிறு எழுந்தான்—ஞாயிற்றின் ஒளியின் இடையிலேயே, தனிப் பளபளப்புடன், மற்றோர் ஒளி, காண்கிறான். வியந்து, இதற்குக் காரணம் யாது என்று பார்க்கிறான்—அவனிடமிருந்த, கேடயத்தின்மீது கதிரவன் ஒளிபடுவதால், காண்போரின் கண்களைச் கூசிடச் செய்திடும் ஒளிப்பிழம்பு உமிழப்படுகிறது என்பதறிந்தான்.

படையினரை விளித்துக் கேடயங்களைப் பளபளக்கச் செய்து வைத்துக்கொள்ளச் செய்தான்.

பாய்ந்துவந்த எகிப்தியப்படை, குன்றின் முகடு வரும்வரையில் காத்திருந்து, சாலமன் படையினர், தமது கேடயங்களைக் கதிரவன் ஒளி அவைமீது விழும்வண்ணம், ஏந்தி நின்றனர்—ஒளிப் பிழம்புகள், ஆயிரமாயிரம் கிளம்பின—எதிரிப்படையினரின் கண்களைத் துளைத்தன! வாளுக்கு வாள்! வேலுக்கு வேல்! இது போர் முறை! ஆனால், இங்கோ ஒளிப் பிழம்புகள் தாக்குகின்றன. கண் கூசுகிறது! வழி தெரியவில்லை! பாதை தவறுகிறது! ஒளிப்பிழம்பைக் காணமாட்டாமல், வீரர்கள் விழிகளை இறுக மூடிக் கொள்கிறார்கள். குதிரைகள் மிரண்டோடுகின்றன, வழி தவறி, படையிலே குழப்பம்! கிலி! விவரமறியாததால் திகில்! படை, மலை முகடுசென்று, படுகுழியில் வீழ்கிறது—சின்னாபின்னமாகிறது, தாக்காமலேயே, தாக்கவந்த பெரும் படையை வீழ்த்துகிறான் சாலமன், அறிவாயுதம்கொண்டு, பளபளப்பான கேடயம், கூர்மையான வாளேந்திய குதிரை வீரர்களை வீழ்த்திவிடுகிறது. ஒளிப்பிழம்பு கிளம்பிப், பெரும் படையைப் பிளந்தெறிகிறது.

தம்பி! கேடயத்தின் பளபளப்பை, ஒளிப்பிழம்பாக்கி, எதிரிப் படையை முறியடிப்பது, சாலமன், செய்துகாட்டும் வரையிலே போர் முறைகளிலே, ஒன்று அல்ல! நிலைமை, ஒருபுது முறையை அளித்தது வெற்றியும் கிடைத்தது.

நாமும், மிகப்பெரிய படையினைத் திரட்டிவைத்துக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியைக் களத்திலே சந்திக்கவேண்டும்—ஆற்றல்மிக்கது நமது படை எனினும், அவர்கள் திரட்டிக் காட்டத்தக்க அளவு, மிகப் பெரிதாகவே அமையும், அறிந்திருக்கிறோம்.

இத்தகைய போரில் நாம், முறைகள், அணிகளின் வரிசைகள், திறமைகளின் வகைகள், அவைகளிலே உள்ள ஏற்றத்தாழ்வுகள் இவை குறித்துப் பேசிக்கிடப்பது, நேரக்கேடு, திறமை துருப்பிடிப்பது என்பவைகளை, நாமே வலியத்தேடிப் பெற்றுக் கொள்ளும் தற்கொலைத் திட்டமாக முடியும்.

மாற்றார், நமது முறை, முகாம், வரிசை, திறமைகளின் வகை, என்பனபற்றி, அறிந்திடவும், அறிவதால் கலாம் விளைவித்திடவும், வழி ஏற்படச் செய்துவைப்பது, நமது படைவரிசையை நாமே, நம்மையும் அறியாமல், காட்டிக்கொடுத்து விட்டுப் பிறகு கண் கசக்கி நிற்கும் கருத்தற்றோர் ஆக்கிவிடும்.

முறைகளிலே, நிலைமைகளுக்கேற்பத் திருப்பங்கள், திருத்தங்கள், புதுமைகள் கண்டிடத் தெரிந்தாலன்றிக், கேடயம் கக்கிய ஒலியினைக்கொண்டே, எதிரிப் படையினை அழித்தொழித்தச் சாலமன் பெற்ற வெற்றிபோல, நமக்கு வெற்றி கிட்டுவதும், இயலாததாகிவிடும்.

இப்போது, சொல்லு தம்பி! நாம் மேற்கொண்டுள்ள குறிக்கோள் வெற்றிபெற வேண்டுமானால், நாம் எத்துணை விழிப்பாக இருத்தல் வேண்டும் என்பது புரிகிறதல்லவா?

இனி, ஒருவிடுதலை இயக்கம், தன் குறிக்கோளில் வெற்றிபெற, என்னென்ன வகையான, திறமைகளைப் பெற்றிருக்கவேண்டும் என்பதுபற்றியும், எண்ணிப் பார், அந்தத் திறமைகளைத் தமது தனித்திறமையாகப் பெற்றுத் திகழும் தம்பிமார்களின் முகாமல்லவா, நமது கழகம் என்பதையும் நினைத்துப்பார்— அப்போதுதான் நமது கழகத்தின் அளவு மட்டுமல்ல, இயல்பு. விளங்கிடும்—ஏற்றம் தெரிந்திடும்,

மாற்றார் மேடை தவறாமல், சிக்கலான கேள்வியை எழுப்பி, நமக்குத் தொல்லை தருகிறார்களே, என்ன கூறி, இந்தச் சிக்கலை அறுப்பது என்று எண்ணிடும்போது, தம்பி! சிற்றரசு உன் நினைவிற்கு வருகிறாரல்லவா! ஆமாம்! அவர் பேசினால், இந்தச் சிக்கலையே சின்னாபின்னமாக்கி எறிவார் என்று தோன்றுகிறதல்லவா?—

நெஞ்சம் நெக்குருக, இதயம் விம்மிட, கண்களில் நீர் துளிர்த்திட, நரம்புகள் புடைத்திட, ஓசை நயமும் சொல்லடக்கு அழகும் துலங்கிடப் பேசி, நமது கொள்கை வழி, கேட்போரை ஈர்த்திடவேண்டும் என்று எண்ணும்போது, கருணாநிதியைக் காண்கிறதன்றோ உன் மனக்கண்.

ஆரியப்படை கடந்தானின் ஆற்றல், இமயம் முட்டிய பெரும்படை நடாத்தியவனின் பெருமை, சாவகம் யவனம், சிங்களமெனும் பல நாடு சென்று பரணி பாடிய அடலேறுகளின் அஞ்சா நெஞ்சம், பரணிபாடித் தரணியாண்ட பைந்தமிழ் வேந்தரின் புகழ்க்கொடி பட்டொளி வீசிப் பறந்திட்டமாட்சி, இவைதமை, முகபடாம் போர்த்த யானை மீதமர்ந்து, முரசொலித்துச் செல்லும் ஆணையாளன் போலவும், இன்று இயற்றும் இன் கவிதை என்றும் நிலைத்து நின்று அறிவு புகட்டும் என்று அறிந்து கவிதை ஆர்த்திடும் அருந்தமிழ்ப் புலவோன் போலவும், தமிழழகும், இலக்கியச் செறிவும் தெளிவும் மிளிர, இனிமை துள்ளிட, ஏறு நடையில், பேசினால், தமிழகத்தின் தொன்மை அறிந்த கற்றோர் களிப்படைவர், கழகத்தின் மாண்பறிவர், என்று எண்ணிடும் வேளையிலே, நாவலர் நெடுஞ்செழியன், நினைவிலே வந்து நின்று, அன்புகெழுமிய தோழர்களே! தோழியர்களே! என்றழைக்கும், பாங்கு தெரியாமலிருக்குமா?

பிரச்சினைகளை அலசி, எளிதாக்கித் தொடர்புடையன, தொக்கி நிற்பன, துணை வருவன, என்னும் வகையினதான கருத்துக்களையும் பிணைத்து, ஆசிரியர் போல எடுத்துக் கூறிக், கேட்போர்க்குத் தெளிவளித்து, நம் பக்கம் அவர் தம் ஆதரவைத் திரட்டிட வேண்டும், என்று எண்ணம் தோன்றும் போது, பல ஆண்டுகள், பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியப் பணிபுரிந்து, இன்று விடுதலை இயக்கத்தின் வீரர் கோட்டத்திலே, திகழும், அன்பழகன் அழைக்கப்பட்ட வேண்டும் என்று தோன்றுகிறதல்லவா?

கட்டையாய் குட்டையாய் உள்ள இந்த இளைஞன் கல்லூரியில் படித்த நாள் தொட்டு, காண்போரைக் கண்களால் கவ்வி, எண்ணங்களை டுத்து இயம்பும் போது, கேட்போர், ஏற்றுக் காண்டனர் என்று அறிந்தாக வேண்டும் என்ற இயல்புடன், நிறுத்தி நிறுத்திப் பேசி, உலைக்கள நெருப்பு வளரட்டும் என்று காத்திருந்து, தழல் கொழுந்துவிட்டதும், இரும்பினைப் பழுக்கக் காய்ச்சி எடுத்துச் சம்மட்டி அடி கொடுக்கும் பான்மைபோல, எண்ணி எண்ணித் துவக்கி, பின்னர், மேலை நாட்டு வரலாற்றுச் சம்பவங்களைப் பின்னி, கொள்கைக் கனலைச் சொற்களாக்கித் தருகிறான்—இத்தகு திறமுடையான் இளைஞர் தமை நமது இயக்கம் ஈர்த்திடத் தக்க வழிமுறை கொண்டான், என்றன்றோ மதியழகனைக் குறித்து, எண்ணுவீர்!

நாடு நமது ஆகாதிருப்பதால் வந்துற்ற நலிவு, நாடாள்வோர் எதனையும் நன்முறையில் கவனியாது இருப்பதால் ஏற்படும் இன்னல், வடவரிடம் சிக்கியதால் வந்துற்ற சீர்கேடு, இவை குறித்துக், கேட்போர் மனதில் குமுறல் எழவேண்டும், எனில், உருக்கமும் உழைப்பாளியின் உள்ளம் அறிந்த தன்மையும், வேதனையைக் காட்டிடும் குரல் கம்மலும், எளியார்க்கே இக்கழகம் என்பதனை எடுத்துக் காட்டிடும் தோற்றமும், கொண்ட முறையில் பேசி, பாட்டாளிகள், நமக்கேற்ற பாசறை, தி. மு. க. என்று உணரச் செய்தல் வேண்டும், என்ற எண்ணம் எழும்போது, நடராசன் என்று நினைவு செல்கிறதன்றோ.

தம்பி! இஃதேபோல ஒவ்வொருவர் குறித்தும், என் எண்ணத்தைக் கூறப்புகின் ஏடு கொள்ளாது— நாடு மதித்திடத்தக்க நல்ல திறமையினைப் பெற்றிருப்போர், நமது பெரும்படையில், உள்ளனர். நான் என் பணியினை எளிதாக்கிட, உடன் இருந்து உழைத்து வெற்றி தேடிட முனைந்து, இப்போது செயலாற்றும் செம்மல்களை மட்டும், குறிப்பிட்டேன்—மற்றவர்பற்றிக் கூறிட ஏதும் இல்லை என்பதால் அல்ல—ஏட்டில் இடம் இராது என்பதால்.

**ஒரு விடுதலை இயக்கம் இதனினும், சிறந்ததோர் பாசறையை இவ்வளவு குறுகிய காலத்திலே, பெற்றது இல்லை.**

இதனை எண்ணி மகிழவும், இந்த நிலைமையைத் தக்கபடி பயன்படுத்திப் பலன் பெறவும், நாம் ஒவ்வொருவரும் முனைந்து நிற்கவேண்டுமேயன்றி, மாற்றார், நமது முறைபற்றிக் கூறிடும் மருளுரை கேட்டு, மனம் தடுமாறிடப்போமோ!!

## தமிழனே விழித்திடு

**மணக்குடியான்**

உறங்கிடும் தமிழனே விழித்திடு—உன்
குறங்கினில் திரிப்பரை யழித்திடு
நொறுங்கிடும் தலைகளைக் கணக்கிடு—இடை
குறுக்கிடும் பகைக்குடல் அறுத்திடு

கடலெனத் தமிழ்ப்படை யமைத்திடு—உன்
உடலையும் கொடுத்திடச் செயற்படு
அடலெனப் பகையைநீ யழித்திடு—அதில்
மடமெனும் இழுக்கினைப் பொசுக்கிடு

அறமெனும் செயல்களை வகுத்திடு—எனில்
மறமெனும் துணையுடன் முடித்திடு
புறமெனும் முதுகினை யொழித்திடு—நற்
றிறமுடைத் தமிழரை உயர்த்திடு.

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவே நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

பார்! பார்! பயல்கள் நாலே நாட்களில், பிளவு பட்டு, ஒருவரை ஒருவர் ஏசிக்கொண்டும், எதிர்த்துக் கொண்டும், திக்காலொருவராக ஓடப்போகிறார்கள்-என்று கூறினாராம், காமராசர்—'தீர்க்கதரிசனம்'—தெரிந்தவர்—

ஆனால், நடந்தது என்ன?

ஆராய்கிறார்களாம், அரசியல் வட்டாரத்தில்—இதன் பொருள் என்ன? நோக்கம் என்ன? விளைவு யாதாக இருக்கும் என்று.

தம்பி! பொதுக்குழு எடுத்த முடிவு, மாற்றார் களின் முகாம்களிலே, உலவிக்கிடக்கும், ஒற்றர்கள், உளவாளிகள். அங்கிருந்து கிளம்பிப், பிற இடங் களில் உறவாடிக் கெடுத்திட நினைக்கும் நயவஞ்சகர் கள் ஆகியோர்களுக்கு, அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டதாம்.

ஆயிரத்தெட்டு ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டு அவர்கள் கிடக்கட்டும்—தம்பி!—உனக்கு வேலை, நிரம்ப இருக்கிறது-தொடர்ந்து செய்யப்பட வேண்டிய பணி.

ஒருவர், முன்பு—இப்போது, அதே பணியினைச் செம்மையாகவும், வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணமும் நடத்திச் செல்லப் பலர்!

மாற்றம் இவ்வளவே—திருப்பம், இதுதான்.

உள்ள திறமைகள் அவ்வளவையும், திரட்டிப் பயன்படுத்த வேண்டிய நேரமிது.

ஒவ்வொருவரும் ஒவ்வோர் துறை நின்று, முன்நின்று, வழிகண்டு, வல்லமையை ஈந்து, பணி புரிந்து, பொது நோக்கம் ஈடேறப் பாடுபட வேண்டிய வேளை இது.

எந்த ஒரு கட்சியிலும், முதல் கட்டத்தில். யார் உங்கள் கட்சிக்குத் தலைவன்? என்று பிறர் கேட்கக் கூட மாட்டார்கள்?

இன்றும் அதுபோலக் கட்சிகள் பல உள.

இரண்டாவது கட்டத்திலே, அலட்சியத்துட னும் கேலிச் சிரிப்புடனும், இவன்தானே உங்கள் கட்சிக்குத் தலைவன்? என்று கேட்பர்.

மூன்றாவது கட்டம் வந்ததும், யார் உங்கள் கட்சிக்குத் தலைவர், அவரா? இவரா? எவர்? என்று கலகம் விளைவிக்கும் நோக்கத்துடன் கேட்பர்.

நாலாவது கட்டத்தின்போது, கட்சித் தலைமைக் காக அவனும் இவனும் மோதிக்கொள்ளப் போகிறார்கள், அமளி எழப்போகிறது, கட்சி அழியப் போகிறது, என்று ஆருடம் கணிப்பார்கள்.

ஐந்தாவது கட்டத்தில், ஏமகாதகப் பேர்வழி களப்பா இவர்கள், என்னமோ பேதம் என்றார் கள், பிளவு என்றார்கள் குழப்பம் வரும் என்றார்கள், குட்டிக்கலகம் ஏற்படும் என்றார்கள்-கடைசியில் பார்த்தால், எல்லோருமே ஒன்றாகத்திரண்டு நின்று இதுதான் எமது கட்சி, புரிகிறதாதெரிகிறதா, என்று கேட்கிறார்களே, ஏ! அப்பா! சாமான்யப்பட்டவர் களல்ல, இவர்கள்-என்று பேசிக் கொள்வார்கள்.

அதுதான், தம்பி! இது!! நாம், வளர்ச்சிபெற்றி ருக்கிறோம், மாற்றார் எதை எதையோ எண்ணி, எதிர்பார்த்து, ஏமாந்து, ஏக்கமுற்றுப்போகும் நிலையிலும், அளவிலும், நாம், வளர்ந்திருக்கிறோம்.

ஏமாளிகள், எண்ணிக்கொண்டார்கள், நமது கழகம் பிளவுபடும் என்று. நாம் ஒருவரைவிட்டு ஒருவர்பிரிந்து போவோம், என்று. நான் நமது கழகத்

தைக் குறித்து கொண்டுள்ள நம்பிக்கை, நமது உடன் பிறந்தார்கள் பற்றி எனக்குள்ள மதிப்பும் பற்றுப் பாசமும், எத்தகையது என்பதை அவர்கள் எங்ஙனம் அறியமுடியும்?

நாடகமாடுவதை இயக்கத் தொண்டாகவும், தொழிலாகவும்கூடக்கொண்டு கருணாநிதி இருந்த நாட்களில், எதிரிகள் இழுத்துப்போட்டு அடித்து, பிணமானான் என்று கருதிப் பெருஞ்சிரிப்புச் சிரித்து விட்டுச் சென்றனர் என்பதைக் கேள்விப்பட்ட உடன், தம்பிக்கு வந்துற்ற ஆபத்தினைத் தடுத்திடும் ஆற்றலும் அற்ற நிலையிலே இருக்கிறேனே! என்போன்றார் மொழிகேட்டும், காட்டும் வழி நடந்தும் பணியாற்றிய, வாழ்க்கையைச் சுவைத்தி டாப் பருவத்தினனை, மாபாவிகள்; நொறுக்கினரே, அடிப்பட்டபோது இரத்தம் கொட்டியபோது, கயவர் கத்தியைக் காட்டியபோது, என்னென்ன எண்ணினானோ! எனக்கு ஒரு அண்ணன் உண்டு! அவன் சொல்லில் எனக்குப் பற்று உண்டு! அவன் இருக்க நாம் அச்சமடையத் தேவை இல்லை என்றெண்ணி இருந்தேன், இதோ நான் கொல்லப் படுகிறேன், எங்கு இருக்கிறான் என் அண்ணன்? என்றெல்லாம் எண்ணித், திகைத்தானோ இதுபோல் எல்லாம் எண்ணிப், புதுவையிலிருந்து விழுப்புரம் வந்து சேரும்வரையில் விம்மிக்கிடந்தேன்,—இடம் தேடி அரசியலை நாடியோருக்கு அந்த இதயத் துடிப்பு எப்படித் தெரியமுடியும்?

அடையாற்றில், காந்தி நகரில், நடிப்பிசைப் புலவரின் வீட்டுமாடியில் படுத்துப் புழுவெனத் துடித்துக்கிடந்தேன், நண்பர் நடராசனை; குன்றத் தூரில் 144 தடையைமீறச் சென்றதற்காக, போலீஸ் தாக்குதல் நடத்தி, துப்பாக்கிச்சூடு எழுப்பினார்கள், நடராசன் என்ன ஆனாரோ தெரியவில்லை என்று, செய்தி தெரிவிக்கப்பட்டபோது.

பாராங்கல்லைத் தூக்கி மண்டையில்போட்டு, நாவலரைக் கொன்றுவிடத் தேனியில் முயற்சி செய்யப்பட்ட செய்திகேட்டு, பழந்தமிழரின் வீரத் துக்கு உறைவிடம் என்று கூறத்தக்க, கட்டுடல் கொண்டவர் தானெனினும், குழந்தை உள்ள மாயிற்றே நெடுஞ்செழியனுக்கு: கொடியவர்கள், கொலைக்கஞ்சாப் பாதகர்கள் சூழ்ந்தகாலை, எப்படி எப்படிப் பதறினாரோ, எதை எதை எண்ணித் துடித் தாரோ என்றெண்ணித் துடிதுடித்துப்போன என் முகத்திலே கப்பிக்கொண்டிருந்த வேதனையை, வேற்றுக் கட்சிக்காரர்கள், எப்படிப் பார்த்திருக்க முடியும்?

தம்பி! நம்மில், ஒருவர் மாற்றாரால் வதைக்கப்பட்ட தைக் கேட்டு மற்றவர் மனம் குமுறிக்குமுறி, ஒரு குடும்பத் தினரானவர்கள்—ஒரு கட்சியின் உறுப்பினர்கள் மட்டுமல்ல.

இதோ இப்போது, பொதுக்குழு கூடும் சமயத் தில், கையிலும் காலிலும் வெட்டுக் காயத்துடன் தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்த குன்றத்தூர் சம்பந்தத்தையல்லவா, கண்டேன் — கட்சிக்காரர் என்று எண்ணத் தோன்றும்—நமது குடும்பத்த வரிலே ஒருவன்—நாம் கொண்ட கொள்கைக்காகக் கொடியவர்களின் தாக்குதலைத் தாங்கித் தத்தளிக் கும் உடன் பிறந்தான் என்ற எண்ணமல்லவா எழுகிறது.

இத்தகைய ஒரு குடும்பத்திலே, முறைகளைப் புதுப்பிக்க எழும் வேகம் அல்லது ஆர்வம், பணி யாற்றுவதிலே எவரெவர் எந்தெந்தத் துறை நிற்பது என்பது குறித்து எழும் எண்ணங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வது போன்ற இவைகளைக் கேட்டும், காட்டியும், பிளவு ஏற்படும் என்று எதிர்பார்ப்பது பேதமை—பிளவு மூட்டிவிட வேண்டும் என்று முயற்சிப்பது கொடுமை—பிளவு ஏற்படவில்லையே, என்று திகைத்தும் திகிலுற்றும் பேசிக்கிடப்பது, மடைமை.

தம்பி! மாற்றார், இது குறித்து எப்படி வேண்டு மானாலும் எண்ணிக்கொள்ளட்டும், கதைத்துக் கொள்ளட்டும்—உனக்கும் எனக்கும் அது குறித்துக் கவலை எழக் காரணம் இல்லை.

ஃ ஃ ஃ

பொதுத் தேர்தலை எதிர்நோக்கி நாம் இருக்கும் நேரமாகப்பார்த்து, என்னை இழுத்து உட்கார வைத்து விட்டார்கள்—பொதுச்செயலாளராக.

மற்றோர் புறமோ, தாக்குவது, குத்துவது, வெட்டுவது, கோணல் வழக்குகள் தொடுப்பது, என்ற முறையில் அமளி மூட்டிவிடும் நடவடிக்கை கள், அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

பணம் படைத்தோரைப், பயமூட்டியும் ஆசை காட்டியும், தேர்தல் நிதி மிகப்பெரிய அளவிலே திரட்டி வருகிறது, காங்கிரஸ் கட்சி.

முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, ஐந்துகோடி ரூபாய் செலவிட்டது காங்கிரஸ் கட்சி என்று, வெட்கமின்றி வீராப்புடன், காங்கிரஸ் அமைச்சர் ஒருவரே பேசினார், பதினைந்து நாட்களுக்கு முன்பு.

நமது கழகப் பிரசாரத்துக்குக் குந்தகம் விளைவிக் கும் முறை பல வழிகளில் கையாளப்பட்டு வருகின்றன.

அதிகார வர்க்கமே ஓட்டுப் பெற்றுத்தர, ஏவி விடப்படக்கூடும் என்று ஐயப்படத்தக்க சூழ்நிலை இப்போதே தெரிகிறது.

இந்த ஐயம் நீங்கவும், பொதுவாழ்வுத் துறை யிலே ஒழுக்கம் ஓங்கவும், தேர்தலுக்கு ஆறு திங்க ளுக்கு முன்பு, காங்கிரஸ் அமைச்சர்கள், தமது பதவியைவிட்டு விலகுவது, அறமாகும் என்று அன்பர் ஆச்சாரியார் பேசுகிறார்—அது எள்ளி நகையாடப்படுகிறது.

புயல் பலமாகத்தான் இருக்கும்—சந்தேகமில்லை.

நாம், அதனை எதிர்த்து நின்று வெற்றி பெற்றாக வேண்டும்—ஏனெனில் நாம், தனி ஆட்களுக்காக அல்ல, அரசியல் கட்சி என்பதற்காக அல்ல—விடுதலை இயக்கம் இது—இதற்கு மக்களிடம் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகிறது என்பதை உலகறியச் செய்தாக வேண்டும்—அதற்காக நாம், தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும்.

தம்பி! உன் நினைவிலே இந்த நிலைமைதான், பளிச்சிட்டுக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி, இவரிவர் இன்னின்ன இடத்தில் இருப்பது எதற்கு என்ற பிரச்சினை அல்ல; அந்தப் பிரச்சினை சூடுதரும், சுவை தாராது—சூடே சுவைதான் என்று வாதிடுவ ரேல், அந்தச் சுவையின் மூலம், கழகம் பலன் பெறாது என்றுதான் கூறவேண்டும்.

எனவே, தம்பி! நமது கழகத்தின் கட்டுக்கோப் பினைக் குறித்தும், ஒன்றுபட்டுப் பணியாற்றும் மாண்பு குறித்தும், நாட்டவருக்கு எடுத்துக் கூறு.

நாட்டவரின் நலிவு போக, வாழ்வு துலங்க, நாம் எடுத்துக் காட்டும் வழியன்றிப் பிறிதோர் வழி இல்லை என்பதை எடுத்துக் கூறு.

அனைவரையும் ஆற்றல் படைத்தோராக்கு; வீரர்களாக்கு; விடுதலைப் போரார்வம் கொண்டவர் களாக்கு!

அண்ணனைச் சிக்கவைத்துவிட்டோம், என் பதிலே மட்டும் அகமகிழ்ச்சி கொள்வதிலே அர்த்த மில்லை.

எனக்கு இதுமுதன் முறையுமல்ல, பூரிக்க, வாழ்த்துகளைப்பெற்று இன்புற.

நான் தம்பி! திராவிடர் கழகமாக நாம் இருந்த போதே, பொதுச்செயலாளன்தான்.

என் நிலைமையிலோ, பெறும் இடத்திலோ ஏற்றம் இல்லை, மாற்றம் இல்லை. என் இயல்பிலே யும் மாற்றம் எழாது.

எளிதிலே திருப்திபெற்றுவிடுபவன், என்னைக் காட்டிலும் ஒருவர் உனக்குக் கிடைப்பது அரிது.

ஆனால், காரியம் சரியாகச் செய்யப்பட வில்லையோ என்ற எண்ணம் ஏற்படும்போது, மற்ற எவரையும் விட அதிகமாக ஏக்கம் அடைபவன், நான்.

'அச்சம் வேண்டாம் அண்ணா' நானிருக்கிறேன், துணை நிற்கிறேன்! என்று உன் போன்றோர், பல இலட்சம், கூறிடும் காட்சி மனக்கண்ணால் காண கிறேன். காண்பதனால்தான், 'சுமைதாங்கி' வேலைக்கு இசைவு தந்தேன்.

என் வேலையை எளிதாக்குவதும், சுவைமிக்க தாக்குவதும், பயனுள்ள தாக்குவதும், வெற்றியுள்ள தாக்குவதும், உன்னிடம்தான், தம்பி இருக்கிறது.

சிதறிச் சிதறிக்கிடந்த சக்திகளை, பத்தே ஆண்டு களிலே, ஓரிடம் கொணர்ந்து, ஒன்றுபடுத்தி, ஓர் எழி லுருவம் தந்த, செயல்வீரனல்லவா! என்னை மகிழ் வித்து, வெற்றிப் பாதையில் கழகத்தை அழைத்துச் செல்லவா உன்னால் முடியாது!!

வா, தம்பி! வா! அந்த எழுச்சியூட்டும் நம்பிக்கையுடன் நாம் ஒன்றாகக்கூடி இன்பத் திராவிடம் தேடி, நடைபோடுவோம்.

பிறந்த பொன்னாட்டுக்கு விடுதலை பெற்றுத்தர, நாம் நம்மை ஒப்படைத்துவிட்டோம். வெற்றி நமதே!

அண்ணன்,

அண்ணாதுரை


# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**

சிறுகதை

# மரணத்தின் வாசல்

## (மறைமுதல்வன்)

"பெண், தாயாவது என்ருல் மரணத்தின் வாசற்படி போய்த் திரும்புவது என்றல்லவா பொருள்!" என்ற பேரறிஞர் அண்ணுவின் நற்கருத்தினை ஏதோ ஒரு புத்தகத்திலே படித்த நினைவு வருகின்றது.

வளர்மதிக்கேற்ற கணவன் கிடைத்து விட்டான் என்ற பெரு மகிழ்வு வீட்டுக்கேயன்றி, உலகுக்கே அல்லவோ ஏற்பட்டது! அன்புமிகு பேச்சால், பண்புமிகு குணத்தால், செல்வமிகு கல்வியால் அனைத்திலும் மேலோங்கி இருந்தான், வளர்மதிக்கு வாய்த்த கணவன். பெயரோ, தமிழரசன்!!! ஆகா... பெயரின் அருமைதான் என்னே! தமிழுக்கே அரசனே! அன்றி... தமிழின் அறிஞனே! என்றே வியந்திடும் வியப்புக்கன்றே உட்பட்டிருந்தான்.

அமைதிமிகு, அன்புமிகு ஓர் நன்னுள்; பொன்னுள்; மணநாள். அன்றையதினம் திருமண வீட்டின் முன் நிற்கும் 'கார்'களின் வரிசை என்ன! மணப்பந்தலின் அழகென்ன! மணவீட்டின் பெருமை என்ன! வந்திடும் உற்ருர், கற்ருர், மற்றவரின் களிப்பென்ன! கச்சேரியின் மதிப்பென்ன! வானொலியின் இசையென்ன! உணவு பரிமாறிடும் பரபரப்பென்ன! எல்லோர் முகத்திலும் கவலையின்றி களிப்பே மிகுந்திருக்கிறதே! ஆடல், பாடல்கள் அமர்க்களப் பட்டிருந்தன.

தமிழரசன் வளர்மதிக்கு மாலையிட்டான்; மணமாலையிட்டான்; மன மாலையிட்டான்; திருமணம் என்ற செடியில் இன்று—இந்த நேரத்தில் —இந்த இன்பகரமான திருமண நேரத்தில்—தமிழரசன், வளர்மதி என்ற இரு மலர்கள் மலர்ந்து விட்டனவே! அம்மலர்களின் மணமென்ன! குணமென்ன! அவர்களின் மனத்தின் அன்பு மனத்தின்—— ஆழமென்ன! அகலமென்ன! யாரறிவார்!!!!!

குடும்பம் துவங்கியது. நல்ல குடும்பம் ஓர் பல்கலைக் கழகம்; நல்ல குடும்பம் ஓர் உயர்ந்த கல்லூரி; நல்ல குடும்பம் ஓர் இன்ப உலகம்; நல்ல குடும்பம் ஓர் சுவர்க்கலோகம்! என்று பலவாருன நற்கருத்துகளுக்கு இலக்கணமாய் இலக்கியமாய்த் திகழ்ந்தது.

வாழ்க்கையெனும் நதியினிலே இருவரும் எதிர்நீச்சல் போட்டு இன்பத்தின் எல்லையைக் கண்டனர்!

மூன்ரும் பிறை வளர்ந்து பௌர்ணமியாகி நல்ல பால் போன்ற ஒளியைக் கொடுக்கின்றது. முழு வட்டமுகங் காட்டிக் காதலர்களை மகிழ்விக்கின்றது. அஃதேபோல் சிறு குழந்தை வளர்மதி வளர்ந்து குமரியானுள். குமரி தமிழரசனைக் கைப்பிடித்தாள். பௌர்ணமியானுள். அவர்களின் திருமண நன்னுளே அவர்களுக்குப் பௌர்ணமி தோன்றும் பொன்னுள்தானே!

மனமொருமித்து—மணம் முடிந்து —இல்லற வாழ்வின் உச்சநிலை அடைந்தனர். அதற்கோர் உதாரணமாய் வளர்மதியின் வயிற்றில் ஒரு சிறுமலர் பூத்துள்ளது. பெண்ணுக்கே உரிய அழகுகளில் பிள்ளையெனும் மலர்களை உதிர்த்தலும் தலையாயது அன்ரே!

தமிழரசன் மகிழ்வு கொண்டான். வளர்மதி உடம்பின் கவலை என்னதான் இருந்திடினும் தனக்கு ஓர் ஆண் மகவோ, பெண் மகவோ கிடைக்கப் போகிற மகிழ்ச்சியிலே திளைத்தாள்!

மாதங்கள் பத்தும் காலண்டரிலிருந்து பறந்து விழ்ந்தன. பின்னேப் பேறு காலம் வசந்தம்போல் வந்தது. மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய அத்தியாவசியம் ஏற்பட, வளர்மதி அழைத்துச் செல்லப்பட்டாள்.

பிரசவம் வேதனையுடன்தான் நடந்திடும் என்று மருத்துவர்கள் கூறி விட்டனர். அனைவர்க்கும் கவலை சூழ்ந்தது.

'நெருநல் உளனெருவன் இன்றில்லை என்னும் பெருமை படைத்து இவ்வுலகு.'

—என்ற இயற்கைக் கருத்தை வள்ளுவனுக் கருளிய உலகல்லவோ இவ்வுலகம்!

இதனுல் மேலும் பெற்ருரும், உற்ருரும் பெருங் கவலை கொண்டனர்.

வளர்மதி மரணத்தின் வாசற்படி நோக்கிச் சென்று கொண்டிருக்கிருள். 'காலன் அவளை, வா' வா, என்று வரவேற்க புன்சிரிப்புடன் மரண மாளிகையில் காத்துக் கொண்டிருக்கிருன். இயற்கையைத் தடுப்பவர் உளரோ! தமிழரசன் கண்ணீர் மட்டுமே விடவேண்டிய நிலையில் இருந்தான். அதோ, ஒரு குரல் அழைக்கின்றதே; குரலின் வார்த்தைகள் என்னவோ!— வளர்மதிக்கு ஓர் ஆண்மகவு பிறந்துளது. தங்கனைப் போன்றே காணப்படுகின்ருன் குழந்தை!

என்னே மகிழ்வு! என்னே மகிழ்வு! "மரணத்தின் வாசற்படியில் காலடி எடுத்துவைத்த என் வளர்மதி திரும்பி விட்டாள். மீண்டும் என்ன கத்துக்கே திரும்பி விட்டாள். மதிக் கருகில்ஒளி கொடுக்கும் நட்சத்திரம் போல் வளர்மதி' வான் மணிக் கரசனைக் கொண்டு வருகிருள்" என்ற மன மகிழ்வு கொண்டான், தமிழரசன்!

அப்போதும் நினைத்திடுகின்ருன் பேரறிஞரின் பொன்மொழியை:— "பெண், தாயாவது என்ருல் மரணத்தின் வாசற்படி போய்த் திரும்புவது என்றல்லவா பொருள்?,,

# உங்கள் உயர்வுக்கு வசதியான வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளுங்கள்



கரகம் — தமிழ்நாட்டின் பிரபல கிராமிய நடனம்

இன்றே வாங்குங்கள்

**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

முதல் பரிசு:

**ரூ. 1,00,000**

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**64-வது குலுக்கல் நாள்:**

**28-3-1974**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்




கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009

# 'குட்டிக் கதைகள் ஒரு நூறு!'

— புலவர். அரிமதி தென்னகன்

## 29. பேட்டி

ஒரு நிருபர் ஒப்பற்ற நடிகையைப் பேட்டி கண்டார்.

நிருபர்:- நிருவாணக் காட்சி பற்றி உங்கள் எண்ணம்?

நடிகை:- கதைக்குத் தேவையென்ருள் நிருவாணமாக நடிப்பதற்கு நான் தயார்தான்.

நிரு:- முத்தக் காட்சியில் நடிப்பீர்களா?

நடி:- அதில் என்ன தவறு இருக்கிறது?

நிரு:- உடலுறவுக் காட்சி பற்றி உங்கள் கருத்து?

நடிகை.- எல்லாம் நடிப்புதானே!!

நிரு:-இப்போதையக் கணவரோடு எப்போது தேனிலவு?

நடிகை:- என்மகன் வந்த பிறகு தான் அதுபற்றி முடிவெடுக்க வேண்டும்.

நிருபர்:- உங்கள் லட்சியம் என்ன?

நடிகை:- பாரத நாட்டின் பண்பாட்டை வெளிநாடுகளுக்குக் கெல்லாம் பரப்பிடும் கலாச்சாரத் தூதுவராக வெளிநாடு செல்லவேண்டும் என்பதே என் லட்சியம்; நோக்கம்; வாழ்வு.

கலாச்சாரமா, அநாச்சாரமா என்று நிருபருக்குச் சரியாகப் புரியவில்லை.

## 30. இப்படியும் ஒரு காலம்...?

அது ஒரு பாராட்டு விழாக் கூட்டம்.

அங்கு ஒருபுலவர்க்கு 'ஆராய்ச்சி அறிஞர்' என்ற பட்டம் கொடுத்துப் பாராட்ட ஆயிரக்கணக்கான அறிஞர்கள் கூடியிருந்தனர்.

ஆராய்ச்சி அறிஞரை மற்ருெரு புலவர் இப்படிப் பாராட்டினர்:-

"ஒரு காலத்தில் 'நன்று' என்னும் தமிழில் இருந்திருப்பதாகவும் அப்படி ஒரு குணம் மக்களிடமும் இருந்திருப்பதாகவும் கண்டறிந்த புலவரைப் பாராட்டுகிறேன்.

இவ்வாறே,

நேர்மை, உண்மை, திறமை தியாகம், போன்ற சொற்களைப் பற்றியும் ஆராய்ந்து வெளிக்கொணரவேண்டும் எனக்கேட்டு."

அங்கிருந்த ஒரு இளைஞன் தன் தந்தையைப் பார்த்து,

"வேண்டாத இந்த ஆராய்ச்சி எல்லாம் இப்போது தேவைதானு?" என்று கேட்டான்.

## 31. மனிதமாமிசம்

குட்டிப்புலி பெரிய புலியைப் பார்த்து,

"ஐயா, வாருங்கள்; இந்த மனித மாமிசத்தைத் தின்போம்" என்றது.

"ஏன்...?"

"ஏனு, மனிதப்புத்தி எனக்கும் வந்துவிடுமே"

"வந்தால் என்ன?"

"நீ என் வயிற்றுக்குள் இருப்பாய்; அவ்வளவுதான்!"

குட்டிப்புலியும் அந்த மனித மாமிசத்தைச் சாப்பிடாமல், ஒரு காட்டுப் பன்றியை வேட்டையாடச் சென்றது.

## 32. விபச்சாரிகளின் குமுறல்

அவன் ஒரு சினிமாக் கவிஞன்.

ஒருநாள்

தன் வேலைக்காரனை அழைத்தான்.

"டேய், நேத்துக்கு வந்ததே படம் பாத்தியா?"

விபச்சாரத்தின் கொடுமையைப்பத்தி என்பாட்டு எப்படி

விபச்சாரிகளின் குமுறல்பற்றி எழுதியிருந்தேனே அந்த வரிகள் எப்படி?"

கவிஞனின் கேள்விக்கு வேலைக்காரன் பதில் சொன்னன்,

"ரொம்ப அனுபவிச்சிப் பாடி இருக்கிங்க"

மறுநாள் அவனுக்கு அங்கு வேலை இல்லை.

## 33. விளையும்பயிர்

ஒருவர் தன் மகனைப்பற்றி அடுத்தவரிடம்,

"என் மகன் ஒரே இடத்தில் இருக்கமாட்டேன் என்கிருன்; போவதும் வருவதுமாகவே இருக்கிருன்;

நேற்று சொன்னதை இன்று மறுக்கிருன்" என்று சொன்னர்.

கேட்டவர் சொன்னர்:-

"எதிர்கால இந்தியாவின் தலைவிதியே இவனிடந்தான் உள்ளது"

சொல்லிவிட்டு,

அவர் பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றப் போய்விட்டார்.

## 33. குத்தகைக்காரன்

"நீ ஏன் தேர்தலில் நிற்க விரும்புகிருய்?"

ஒருவன் தன் நண்பனைக் கேட்டான்.

"நான் எவரையும் தவறுசெய்ய விடமாட்டேன்"

"பிறகு?"

"எவரையும் ஊழல் செய்ய விடமாட்டேன்"

"பிறகு?"

"எவரையும் லஞ்சம் வாங்கவிடமாட்டேன்"

நண்பனின் பேச்சைக்கேட்டு அவன் உள்ளம் கீழ்வருமாறு நினைத்தது.

"இவன்தான் நாளைய கோடீஸ்வரன்"

## 34. எச்சரிக்கை

மெத்தையில் ஏறியவன் எத்தனைப் படிகளை ஏறினேம் என்று எண்ணிப் பார்த்தான்.

"இருபது படிகள்!!"

"இருபது படிகளை ஏறியா நாம் இந்த மாடிக்கு வந்தோம்" என்று தன்னைத்தானே பாராட்டிக் கொண்டான்.

அப்போது ஒருபடி சொன்னது,

"இருபது படிகளா நம்மை மாடிக்குக் கொண்டு வந்தன என்று நினையாமல்,

இருபது படிகளையா நாம் ஏறி இந்த உயர்ந்த மாடிக்கு வந்தோம் என்று இறுமாப்பு அடைகிருய்?... இரு...இரு...

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

வாய்ப்புகள் எல்லாம் நிறைந்த பெரிய வீடு அது. மெத்தை நாற்காலிகள், கட்டில், மிசைப் பலகைகள், உணவுமேடை, புதுமுறையில் அமைந்த மின்வாய்ப்புள்ள அடுப்பு, புதிய கருவிகள், நிறைய பண்டங்கள், வீட்டுப் பொருள்கள் எல்லாம் இருந்தன.

ஆனால் வீடு வெறிச்சோடிக் கிடக்கும்.

அருமையான வானொலிப்பெட்டி உண்டு—

புகழேந்தி இயக்கினாலொழிய மற்ற நேரங்களில் அது ஊமையாகக் கிடக்கும்.

பூட்டில்லாத சிறையில் குற்றம் செய்யாத குற்றவாளியாகக் கிடப்பாள் வெள்ளிவீதி.

வீட்டுப் பணிகள் விரைவில் முடிந்துவிடும். மற்ற பொழுதுகளில் ஏடுகள், நூல்கள் படிப்பாள்; ஏதோ ஆழ்ந்த எண்ண அலைகளில் மிதப்பாள்; களைத்துவிட்டால் தன்னை மறந்து உறங்கி விடுவாள்.

இந்தச் சோர்ந்த வாழ்வு அவளுக்குக் கசப்பளித்தது, தன்னைத்தானே ஆராய்ந்து மதிப்பிட முயல்வாள். கணவன் போக்கிலும் எவ்வகை மாறுதலும் இல்லாதது அவளுக்கு ஆற்றாமையாகவுமிருந்தது; ஆறுதலும் அளித்தது!

பொழுதுசாய்ந்து விட்டது. ஆரவார நகரமான சென்னையில் அந்திமாலை நேரத்தில்தான் ஆரவாரப் பேரோசை மிகுந்திருந்தது.

வெள்ளிவீதியின் இல்லம் இரைச்சல்களுக்கு அப்பால் அமைதிமிக்க சூழ்நிலையில் இருந்தது.

நண்பகலின் கொடிய வெயிலுக்கு அஞ்சி உறங்கிய வெள்ளிவீதி கண்விழித்ததும் குளித்துத் தூய உடை புனைந்தாள்.

புகழேந்தி வருவதற்குமுன் சிற்றுண்டியும் சுக்கு நீரும் ஆக்கினாள். அலுவலகத்திலிருந்து மீண்ட புகழேந்தி உடைகளைக் களைத்து விட்டுக் குளித்தபின் எளிய உடையணிந்து வந்தான்.

மிசைபலகைமீது காஞ்சி, செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், தமிழம், தேன்துளி, தமிழ்ச்சிட்டு, தேன்மொழி, செம்பரிதி, கைகாட்டி, மாலைமுரசு ஆகியவை அடுக்காக அமைக்கப் பெற்றிருந்தன.

நாரண துரைக்கண்ணன் எழுதிய நடுத்தெரு நாராயணன் என்ற புதினத்தின் நடுப்பகுதியில் ஒரு அட்டைபக்க அடையாளத்திற்காக வைக்கப்பட்டது மிசைப் பலகைமீது இருந்தது.

அதை எடுத்துப் படிக்கத் தொடங்கிய புகழேந்தி, அந்தக் கதைச் சுவையில் புதைந்து அழுந்திப் போனான்.

உப்புமாவு, முறுக்கு இரண்டு, மலைவாழைப்பழம் இரண்டு ஆகியவற்றைத் தட்டகத்தில் வைத்து எடுத்துவந்த வெள்ளிவீதி மிசைப்பலகைமீது வைத்தாள்.

வேலை முடிந்ததும் வெளியேறி விடுபவள் அமைதியாக நின்றாள்.

சுக்குநீர்க் குவளையைச் சற்றுப்பொறுத்து அவன் முன் நீட்டினாள். அதைவாங்கி மெல்ல உறிஞ்சிக் குடித்தபடி 'ஏன் வெள்ளிவீதி இன்னம் அங்கே நிற்கிறாள்?' என்னும் வினா உள்ளத்தைக் குடைய அமைதியாகத் தன்போக்கில் இருந்தான்.

வெண்ணிறச் சேலை, செந்நிற இறவுக்கை அணிந்து, வெண்மல்லிகை மலர்சூடியிருந்தாள் வெள்ளிவீதி. நீண்ட கூந்தல் பின்னங்காலைத் தொட்டுக் கொண்டிருந்தது.

பிறர் மனதைக் கெடுக்கக்கூடிய வகையில் போலி ஒப்பனை—கயமை ஒப்பனை—செய்துகொள்ளாத வெள்ளிவீதி, திருமணத்திற்குப்பின், முன்னையினும் எளிய நிலையில் இருந்தாள்.

வாழைப்பழங்களை உறித்து உண்ணமுற்படும் வரை அவள் நின்றிருந்தாள் அவனும் அவளுக்காக—அவள் பேச்சுக்காக—எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

வீட்டிற்கு வேண்டிய பொருள்கள் ஏதாவது இல்லையோ? அதைச் சொல்லத்தான் நிற்கிறாளோ? என எண்ணியவன் உள்ளத்தில் வேறுநினைவு படர்ந்தது.

ஒரு மலைவாழைக் கனியைப் புகழேந்தி அவளிடம் நீட்டி, "சாப்பிடு வெள்ளிவீதி." என்றான்.

'அதைப் பெறுவதா? மறுப்பதா?' என வெள்ளிவீதிக்குக்குச் சிக்கல் மூண்டது.

"நான் சாப்பிட்டு விட்டேன். உங்களுக்கென எடுத்து வைத்திருந்தேன். நீங்கள் சாப்பிடுங்கள்." எனப் பணிவாக—ஏன்?—துணிந்து கூறினாள்,

## முக்கிய அறிவிப்பு

காகித தட்டுப்பாடு காரணமாக காஞ்சியின் கடந்த 24—2—74, 3—3—74, 10—3—74 ஆகிய கிழமை இதழ்கள் வெளிவரவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். காகிதங்கள் பல மடங்கு விலையேறி இருக்கிறது. மற்ற எல்லா ஏடுகளுமே தனது விலையை உயர்த்தி உள்ளது. ஆனால் "காஞ்சி" இதழின் விலை உயர்த்தப்படவில்லை. எனவே எல்லா நூலகங்களும், சந்தாதாரர்களும் சந்தா தொகையை பிடித்தம் செய்யக்கூடாது என கேட்டுக்கொள்கின்றோம்.

உரிமையாளர்,
"காஞ்சி"
காஞ்சிபுரம்-3.

வெளிவருகிறது!

# 'காஞ்சி'

## அறிஞர் அண்ணா நினைவு சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணாவின் படைப்புக்களுடன்

கழகத் தலைவர் கலைஞர்

கழகப் பொதுச்செயலாளர் நாவலர்

அமைச்சர் பெருமக்கள் அருந்தமிழ்ச் சான்றோர்கள்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
டாக்டர் சாலை. இளந்திரையன்
குருவிக்கரம்பை சண்முகம்
தாமரைக்கண்ணன்
இரா. கண்ணிமை
கருமலைப் பழம்நீ
எழிற்கோவன்

ஏ. கே. வில்வம்
மணிவேந்தன்
பல்லவன்
அரிமதி தென்னகன்
தி. நா. அறிவுஒளி
தமிழ்ச் சுரபி
ஆத்தூர் பன்னீர்ச்செல்வம்

மற்றும்

இளைய தலைமுறையின் இலட்சிய எழுத்தாளர்கள்
அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு
மார்ச் திங்களில் வெளிவரவிருக்கிறது.

தேவைக்கு முன்கூட்டியே தெரிவிக்கவும். விலை ரூ. 3-00

மேலாளர், விவரங்கட்கு:

"காஞ்சி" அலுவலகம் :: காஞ்சிபுரம்-3.

"மலருக்கு" சேர்த்து சந்தா கட்டாத சந்தாதாரர்கள் ரூ. 3-00 அனுப்பி மலர் பெற்றுக்கொள்ளவும்.


அவளை வற்புறுத்த விரும்பாமல் தானே பழத்தை உண்ணலானான்.

"என்ன வெள்ளிவீதி? உட்காரேன்" என்றான்.

அவளுடல் வியர்த்தது. அவள் அமரவில்லை.

புகழேந்தி முகத்தை நிமிர்ந்து ஒருமுறை நோக்கிவிட்டு தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"என்ன வெள்ளிவீதி? ஏதோ கேட்க..."அவள், யார்?"

—கேட்டே விட்டாள்!

வெள்ளிவீதியின் வாய், குமுறித் தடுமாறி நடுங்கியவாறு எவ்வாறோ கேட்டுவிட்டது!!

எதிர்பாராத கேள்வியை, எதிர்பாராதபோது கேட்ட புகழேந்தி, புலியின் தாக்குதலுக்கு ஆட்பட்டவன் போலத் திகைத்து வெருவி அஞ்சி நிலைகுலைந்தான்.

வைத்தவிழி பெயர்க்காமல் அவனையே நோக்கிக் கொண்டிருந்தாள் துப்பறியும் வல்லுநனைப் போல!

வெள்ளிவீதிக்கு இவ்வளவு 'துணிவு' எங்கிருந்து, எப்படித் தோன்றியது?

புகழேந்தி நிமிர்ந்து பார்த்தான். வெள்ளிவீதியின் முகத்தில் அமைதியழகு சுடர்விட்டொளிர்ந்தது. அவன் முகத்தில் உறுதி, அஞ்சாமை, உள்ளத்தை ஊடுருவி நோக்கும் ஆழம் பார்வையாலேயே எதிரிலுள்ளோரைப் பணியவைக்கும் பெண்மையாளுமை ஆகியவை மின்னின.

"அதிகமான் மகள் செல்வி!"

கூறிய புகழேந்தி பார்வையை மாற்றிக் கொண்டான்.

"வெள்ளிவீதி, ஆனால்...ஆனால்...நீ தவறாக நினைக்காதே, அவளோடு நான் பேசியதே இல்லை. அவள் என்முன் வந்ததே இல்லை. அவளுக்கே என் எண்ணம் தெரிந்தே இருக்காது. எனக்குள் நான் அவளை எண்ணியிருந்தேன். ஆனால்...?"

அவன் பேசிக்கொண்டேயிருந்தான்.


அவள் அறையை விட்டு வெளியேறியே போய் விட்டாள்.

வெள்ளிவீதியின் உள்ளத்திலே பொங்கும் உணர்ச்சித் தீயின் கொதிப்பைத் தாங்கமாட்டாமல் ஓடிப்போனாளா? அல்லது—

அவனுள்ளத்தில் செல்விக்கிருக்கும் உருக்கம், இடம், உயர்வுபற்றி மேலும் ஏதேனும் கூறிவிடுவானோ; அதைக்கேட்டுப் பொறுத்துக்கொள்ளும் திறன் தனக்கிருக்காதென்று எண்ணி ஓடினாளா?

(வளரும்)

# நமக்கும் நல்லது!
# நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில்
## வருவாய் இரட்டிப்பாகிட
## தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கடமைதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே,
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.